1974 சனவரி 25]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(இ) வினவுக்கு இடமில்லை.

திரு. கா. வேழவேந்தன்: ஏற்கெனவே பரிசீலனையில் இருந்த திட்டம்தான் இது. அந்தப் பாதை அகலப்படுத்தப்பட்டுவிட்ட காரணத்தினல் அதை மீண்டும் பரிசீலனை செய்து அந்த வழித் தடத்தில் பேருந்தினைவிட முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பாதை சரியில்லை என்கிற தகவலைத் தான் தந்திருக்கிறார்கள். பாதை சரியாக இருக்குமானல் மறுபரிசீலனை செய்யப்படும்.

பிராட்வே-முக்கரம்பாக்கம் பேருந்து வழித்தடம்

*** 180 வின—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) வழித்தடம் எண் 137 (பிராட்வே-முக்கரம்பாக்கம்) பேருந்து 1—10—1973 முதல் நிறுத்தப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அவ்வழித்தடத்தில் மீண்டும் பேருந்துப் பணியினைத் தொடர எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(இ) வினவிற்கு இடமில்லை.

திரு. கா. வேழவேந்தன்: அந்தப் பேருந்து சில நாட்களாக நின்றுவிட்டது என்று சொல்கிறார்கள். காரணம் அது பழைய பேருந்து. புதிய பேருந்தினைவிட ஆலோசிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேருந்து இப்போது சரியாகப்போய் வருகிறதென்றுதான் சொல்கிறார்கள். பழைய பேருந்தா, புதிய பேருந்தா என்கிற விவரம் என்னிடத்தில் இல்லை.

குழந்தைகள் அருங்காட்சியகம்

*** 151 வின—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறுவர்களின் கலைத்திறமையை வளர்த்திட தனி மியூசியம் நிறுவிட அரசு ஆலோசித்து வருகின்றதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தமிழகத்தில் சென்னை அருங்காட்சியகத்தின் பகுதியான குழந்தைகள் அருங் காட்சியகம் ஒன்று நிறுவும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

Archaeological excavations in Karur

* 152 Q.—THIRU N. K. PALANISWAMY :
THIRU R. R. MUNUSWAMY :
THIRU P. SOUNDARAPANDIAN : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state whether the State Department of Archaeology has undertaken excavations in Karur in Tiruchirappalli district?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம். இங்கு அகழாய்வு தொடர்ந்து நடந்து வருகிறது.

திரு. என். கே. பழனிசாமி : பரிசீலனையின் ஆரம்பத்தில் பாண்டியர் காலத்து நாணயங்களும், சேரர் காலத்து நாணயங்களும் கலந்து கிடைத்திருப்பதாகத் தகவல் வந்திருக் கிறதே, 'அந்த நாணயங்களைத் தவிர ரேர் பைண்டிங்ஸ்—அதிசயமான பொருள் கண்டுபிடிப்பு இருக்கிறதா? எதை எதைக் கண்டு பிடித்திருக்கிறார்கள் என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கரூர் நகராட்சியினர் நீர்த்தொட்டி அமைக்கும் பொருட்டு ஒரு சோதனைக் குழியை வெட்டினபோது மண்ணில் கறுப்பு, சிவப்பு நிறம் கொண்ட பழமையான பானை ஓடுகளும், சுட்ட செங்கற்களும் கண்டெடுக்கப்பட்டன. அதன்மேலும் இரண்டு குழிகளை தொல்பொருள் ஆய்வுத்துறை அகழ்ந்தெடுத்து ஆய்வு நடத்தியது. அப்போது குழியில் மூன்று செப்புக் காசுகள் கண்டுபிடிக்கப் பட்டன. அவைகளில் ஒரு செப்புக்காசு ரோமானியருடைய காசாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. மேலும் இக்குழியில் ரோமானிய மதுக்குடத்தின் பகுதிகளும், சங்கு வளையல் துண்டு களும், கண்ணாடி வளையல் துண்டுகளும், சுடுமண் மணிகளும் கண்டு பிடிக்கப்பட்டன. இக்குழியின் தரையில் ஆழத்தில் செங்கல்லாலான தரைப்பகுதி கண்டுபிடிக்கப்பட்டது. இதில் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இவ்விரண்டு குழிகளிலுள்ள கட்டட அமைப்பையும்